முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1506

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.11.2023, திங்கட்கிழமை

1. ஞான சொரூப அரங்கனே
ஞானிகள் வடிவான தேசிகனே
தானதர்மத்தின் பலம் கொண்ட அரங்கனே
தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சோபகிருது துலைத் திங்களில்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 27 ம் நாள், 13.11.2023, திங்கட்கிழமை)
சிந்தைபட அரங்கன் வாழ் பிரணவக் குடிலில்
சித்தியாக ஆறுமுகன் யான் இரண்டற கலந்திருக்கின்றேன்
3. விந்தை கொண்டு உலகமாற்றம்
விரைந்து நடக்க அரங்கன் தொண்டர்கள்
அரங்கன் தொண்டர்கள் சிந்தைவைத்து
அரங்கன் தருகின்ற உபதேசத்தை
4. சித்திமிகு வேதமாக ஏற்று இத்தரையில் ஞானிகள் பூஜை
செய்து கொண்டு எங்கும் தர்மம் பெருக்கினால் போதும்
அப்பனே தர்ம வழியே ஆறுமுகன் யான் இறங்கி
ஆற்றலாக உலகை காப்பேன் அகிலத்துக்கு மாற்றமும் தருவேன்
5. மாற்றம் தர அரங்கனை தேர்வு செய்துள்ளேன்
மண்ணுலகில் அரங்கன் வழி உலகோர் இணைந்து வந்தால் போதும்
ஆற்றல்பெருகி உலகமெங்கும் அரங்கமகான் சக்திவழி
அகிலத்துக்கு நன்மையும் பாதுகாப்பும்
6. இந்த பேருலகையே மாற்றும் மகா விந்தையும்
ஆறுமுகன் யான் நடத்தி அற்புதம் நிகழ்த்துவேன்
அரங்கனுக்கு இன்னும் சக்தி கூட்டி அரங்கன் வருங்காலம் ஆற்றல்பட
தேகமனோபலமோடு எழுந்தமர்ந்துநடக்கும் வல்லமையும்கூட்டி அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–